Registered No. M. 30 "SIDDHANTHAM"
Vol. 38—No. 1

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38	குரோதி தை 1965 ஜனவரி	இதழ் 1

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

31-1-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

அன்றே சமாஜ மணிவிழாக்குழுக் கூட்டமும் நிகழும். யாவரும் வந்து கலந்து ஏற்புடைய கருத்துக்களை வழங்க வேண்டுகின்றோம்.

தை மாத விசேட தினங்கள்

3	(18—1—65)	அரிவாட்டாய நாயனார் விழா
8	(21—1—65)	சண்டேசுர நாயனார் விழா
,,	,,	திலகவதியார் விழா
12	(25—1—65)	திருநீலகண்ட நாயனார் விழா
21	(4—2—65)	அப்பூதியடிகள் விழா
24	(7—2—65)	கலிக்கம்ப நாயனார் விழா
29	(12—2—65)	கண்ணப்ப நாயனார் விழா

பேரூரில் இளைஞர்கள் கருத்தரங்கு 25, 26 டிசம்பர் 1964

இக்கருத்தரங்கில் நன்கு கற்ற பல இளைஞர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அக்கருத்துக்கள் அவர்கள் ஆர்வத்தையும், மன எழுச்சிகளையும் பிரதிபலிக்கின்றன. அவைகளைப் பெரியோர்கள் நன்கு சிந்தித்து நல்வழி வகுத்துப் பயன் பெறச் செயல் வேண்டும்.

பிற செய்திகள்

இலங்கை திரு. S. நடேச பிள்ளையவர்களுக்குப் பட்டமளிப்பு

நம் சமாஜத்துடன் தொடர்புடையவரும் முன்னர் இலங்கை அரசாங்க அமைச்சருமான திரு S. நடேச பிள்ளையவர்கட்கு இலங்கைப் பல்கலைக் கழகம் டிசம்பர் 23, 1964 அன்று கௌரவ டாக்டர் ஆஃப் லெட்டர்ஸ் (D. litt) பட்டம் அளித்தது. அதுகுறித்து சமாஜம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | குரோதி தை 1965 ஜனவரி | இதழ் 1

ஆயிரந்திருநாமம்

[ஆசிரியர்]

"பேராயிரம் உடைப் பெருமான்" என்று ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் நாம் பாடுகின்றோம். தமிழ்த் திருமுறைகள் எங்கும் ஆண்டவனுடைய ஆயிரம் பெயரைச் சிறப்பித்துக் கூறக் காண்கின்றோம். வடமொழியிலோ, சகஸ்ர நாமம் என்ற பெயரால் பல நாமத் தொகுதிகள் ஏற்பட்டு இருக்கின்றன.

அவற்றுள், பராசக்தியின் புகழாகிய லலிதா சகஸ்ர நாமமும், திருமால் புகழைக் கூறும் விஷ்ணு சகஸ்ரநாமமும் இவற்றின் பாஷ்யங்களும் மிகவும் பிரசித்தி வாய்ந்தவை. பாஷ்யம் எழுதியவர் ஆதிசங்கரர். அவர் அத்வைதநிரூபணம் செய்தவர். பிரமம் ஒன்றைத் தவிர வேறு பொருள் இல்லை; பிரமம் ஒன்றே உள்ளது என்பது அவருடைய சித்தாந்தம் ஆயினும் இந்தச் சித்தாந்தத்தை நிறுவியமையால் மட்டும் அவருக்கு ஆத்மசாந்தி பிறக்காமல் மூர்த்தி வழிபாடு செய்தார். விசுவநாதர், விசாலாக்ஷி, அன்னபூர்ணி, தக்ஷிணா மூர்த்தி ஆகிய மூர்த்திகள் மீது

பல தோத்திரங்களை அவர் பாடினர். பரம் பொருளின் நிலை முடிவாக எது வென்று நாம் கொண்ட போதிலும், அந்த நிலையை அடைய வேண்டுமானல் அதற்குப் பக்தியும் வழிபாடுமே வழிகள் என்று சங்கரர் கருதினர் என்பதையே இத்தோத்திரங்கள் நமக்கு நிரூபிக்கின்றன.

சகஸ்ர நாமங்கள் நம: என்று முடிகின்றன. இம் முடிவின் பொருள் அகங்காரத்தை, அதாவது ஆணவத்தை, நான் என்ற முனைப்பை, தற்போதத்தை ஒழித்துச் சிவ போதத்தின் வழி அதாவது திருவருள் வழி நிற்றல் என் பதே ஆகும். "நம—சிவாய" என்ற மந்திரம் மேலான சைவ சித்தாந்த நுண் பொருளை உள்ளடக்கி இருக்கிறது என்று ஆன்ருேர் கூறுவர். அப்பொருளை உணர்ந்து அதன் வழி நிற்றல் எளியோர்க்கு அரிது. ஆயினும் "நம—சிவாய" என்று உச்சரிப்பதனல் மட்டும் சிறந்த பலன் கைகூடும் என்பது உறுதி.

இம்மந்திரம், நற்றுணையாவது, நாவினுக்கு அருங்கலம், உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்று அறுப்பது, நாம் உற்ற நடுக்கத்தைக் கெடுப்பது, நல்ல விளக்கு என் றெல்லாம் அப்பர் சுவாமிகள் பாடுகின்ருர். இம்மையிலும் அம்மையிலும் துணையாவன, பிறப்பை யறுப்பன, பீடை கெடுப்பன, மாடுகொடுப்பன, வினைப்பகைக்கு அத்திரமாவன அஞ்செழுத்து; நம—சிவாய மந்திரம் எல்லாத் தீங்கையும் நீக்கும், வல்வினை சிந்துவிக்கும் என்பன சம்பந்தர் திருவாக்கு.

"உனை நான் மறக்கினும் சொல்லும்நா நம-சிவாய" என்பர் சுந்தரர்.

திருமுறைகளில் வரும் அகத்துறைப் பாடல்கள் இறை வன் திருநாமத்தை உச்சரிப்பதே இன்பம் என்பதை விளக் குகின்றன. "சிறையாரும்—மடக்கிளியே" என்ற பாசு ரத்தில் "தோணிபுரத்தீசன்......திருநாமம் எனக்கொரு கால் பேசாயே" என்று சம்பந்தர் வேண்டுகிருர். அஞ் செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேன்," "நம-சிவாய

என்று உன் அடிபணியாப் பேயன்'' என்று மாணிக்கவாசகர் பாடும்போது, நாம உச்சாரணத்தின் பெருமையே கருத்தில் கொள்ளத் தக்கது.

நாம சங்கீர்த்தனமும் பஜனையும் இந்திய நாட்டில் மராட்டியர்களால் வழக்குக்கு வந்து நாடு முழுமையும் பரவின. இன்றைய கதா காலட்சேப முறையும் அவர்களால் பரவியதே யாகும். கையில் தாளத்தைத் தட்டிக் கொண்டு கூட்டங் கூட்டமாக ஆண்டவனுடைய பெயரைத் திருப்பித் திருப்பிப் பல்லாயிரம் முறைசொல்லிப் பாடி ஆடுவது அவர்களுடையவழக்கம். பாமரமக்களிடையே பிரசாரத்துக்கும், தெய்வ உணர்ச்சிக்கும் இது பெரும் கருவியாக உதவி இருக்கிறது. மிகச் சிறந்த மராட்டி வீரராய் இருந்த சிவாஜி கொண்டிருந்த தெய்வ பக்தியும் அவர் குருவாகிய ராமதாசின் பக்திப் பெருக்கும் இந்த ஈடுபாட்டிற்குத் தோற்றுவாயாக இருந்திருக்கலாம்.

தமிழ் நாட்டில் பிற்காலத்தில் இப்படிப் பட்ட பஜனையை இராமலிங்க சுவாமிகள் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். சிவபிரான் மீதும், முருகன் மீதும் அவர் எண்ணில்லாத நாமாவளிகள் இயற்றினர். இவற்றுள் பலவற்றை, படித்தோரும் படிப்பில்லாதோரும் இன்று சொல்லிப்பாடி ஆடுகிறார்கள்.

மனிதன் உணவு உண்கிறான். உணவு மூன்று விதமான அனுபவத்தை மனிதனுக்குக் கொடுக்கிறது. ஒன்று, உணவு உண்பதிலேயே ஒரு சுகம் உண்டாகிறது. இரண்டு உடம்புக்கு வேண்டிய சத்து உணவினால் கிடைக்கிறது. மூன்று, பசி அடக்குகின்றது. பக்தியும் அதனால் விளையும் நாம சங்கீர்த்தனமும் இவ்வாறே பக்தனுக்கு மூன்று வித அனுபவங்களை உண்டாக்குகின்றன. ஆண்டவன் பெயரைச் சொல்லுவதால் பரம் பொருளிடத்தில் அளவிறந்த பக்தி உண்டாகின்றது. இறை அனுபவம் உண்டாகின்றது. மற்ற பந்தங்களிலிருந்து மனம் விடுதலை பெறுகின்றது. இதுபாக

வதம் பதினோராவது ஸ்கந்தத்தில் உள்ள ஒரு பாடலின் கருத்து.

காந்தியடிகள் தம்முடைய பிரார்த்தனைக் கூட்டங்களில் ராமநாம சங்கீர்த்தனமே ஒரு முக்கிய அங்கமாகக் கொண்டிருந்தார். நாம ஜபத்தின் பின்னரே தம்மனம் தூய்மை பெற்றதென்றும் ஆண்டவன் தம் உள்ளத்தில் எழுந்தருளித் தமக்கு வழிகாட்டுகிறான் என்றும் அவர் நம்பினர். அவ்விதமே சொல்லியும் நடந்தும் வந்தார்.

ஆதலால் இறைவன் திருநாமங்களைச் சொல்லி அருச்சிப்பதும் வழிபடுவதும் பஜனை செய்வதும் வழிபாட்டின் முக்கிய அம்சமாக ஆதல் வேண்டும். கூட்டு வழிபாட்டுக்கு நாம சங்கீர்த்தனம் மிகச் சிறந்ததொரு கருவி. அண்ணாமலையானுக்கு அரோகரா, நம:பார்வதீபதயே ஹர ஹர மஹாதேவா என்பதை யொத்த கோஷங்கள் எல்லா மக்களுடைய மனத்தையும் ஒருமுகப்படுத்த உதவுகின்றன. பெயரை மட்டும் உச்சரிப்பதால் என்ன பயன் என்ற ஆராய்ச்சி இனிவேண்டுவதில்லை. நாம ஜபமே பிறவிக்கடல் கடக்கஉதவும் தோணி என நாம் கருதுதல் வேண்டும்.

திருப்பேரூர் ★

கோ. மு.
முத்துசாமி பிள்ளை.

நிகழும் இவ்வாண்டில் பேரூரில் சைவ சித்தாந்த சமாஜத்தின் 59ஆவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அதுபற்றிய விவரங்கள் எல்லாம் பிறிதோரிடத்தில் காணலாம். இப்போது நாம் காண இருப்பது பேரூரின் பெருமையைப் பற்றிய தாகும்.

பேரூர் கொங்கு நாட்டிற்குரியது. மரஞ்செடிகொடிகளின் நறுமணம் கொண்டது என்னும் பொருளில் வந்

துள்ளது 'கொங்கு' என்னும் சொல். "கொங்கு மலிகின்ற தொரு கொங்கு வளநாடு" எனப் பேரூர்ப் புராணம் புகழ் கிறது.

இப்போதுள்ள பேரூர் நெடுங்காலத்திற்கு முன்னர் வனமாக இருந்தது. இவ்விடத்தினருகில் உள்ள நொய்யல் ஆற்றில் பசுக்கள் நீரருந்தி விட்டுப் பட்டிக்குத் திரும்புவது வழக்கம். (பட்டி என்பது மாட்டுத் தொழுவம் ஆகும். இவ் வகையில் கால்நடைகளை அடைக்கும் இடத்தைக்கால்நடைப் பட்டி எனக் கூறுகிறோம். ஆங்கிலத்தில் Cattle pound என்பார்கள்) ஒருநாள் ஒரு கரியநிறமுள்ள பசு (காராம்பசு) தன் கன்றுடன் பட்டிக்குத் திரும்பும் போது தன் கன்றின் கால் அங்கிருந்த புற்றில் சிக்கிக் கொண்டது. அதுகாரண மாக அதன் குளம்பு அங்கு ஏதோ ஒரு பொருள் மீது தாக்கிற்று. உடனே துயரம் தாங்க இயலாது கன்று தன் கொம்பால் அப்புற்றைக் குத்தியது. பின் அது தன்காலை மீட்டுக் கொண்டது. அப்பொழுது அப்பொருளின் மீதுவடு உண்டாகி இரத்தம் பீறிட்டு வெளிவந்தது. இதனைக் கண் ணுற்ற மாட்டிடையன் அக்கணமே தன்தலைவனிடம்சென்று நிகழ்ந்ததைக் கூறினன். அரசன் இரத்தம் வெளிவந்த இடத்தை அகழ்ந்து பார்த்த போது அதில் இலிங்கவடிவம் இருந்தது. இதன் பின்னரே இவ்விடத்தில் திருக்கோயில் தோன்றிற்று.

சிவபெருமான் சாதிமத பேதமின்றி யாவருக்கும் அருள் புரிபவர். சுந்தரமூர்த்தி நாயனர் கொங்கு நாட்டி லுள்ள பலதிருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்த தவர். சுந்தரருக்கு அருள் புரிய விரும்பிய அப்பெருமான் பள்ளன் உருவத்தில் உழவுத் தொழில் புரிந்திருந்தார். சுந்தரர் உழவுத்தொழில் புரிந்திருந்த இறைவனையும் இறை வியையும் தரிசித்தார். சுந்தரருக்கு அருள் புரியும் வகையில் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். இதன் அருமையை உணர்ந்த சுந்தரர் பின்னர்த் தில்லையில் திரு நடனத்தைக் கண்டு களித்தனர். அங்கே,

"மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்
பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ளும்
அன்றே"

என்பதாகத் துதித்தனர். இவ்வகையில் இத்தலம் மேலைச் சிதம்பரம் என்னும் பெயர் பெற்றுத் திகழ்கிறது.

இத்தலத்திலுள்ள திருக்கோயில் திருப்பணி தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. கரிகால் சோழன் செய்த திருப்பணி "சோழன் துறை" என்னும் பெயரில் இன்றும் விளங்குகிறது. சுந்தரர் நடவு உற்சவமும் நடைபெற்று வருகிறது. பங்குனி உத்திரத் திருவிழா, மார்கழித் திருவாதிரைவிழா முதலியவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இங்கே பிறவாப்புளி இருக்கின்றது. இம்மரத்தி லிருந்து கிடைக்கப் பெறும் புளிய விதைகள் முளைப்ப தில்லை. இம்மரத்திற்கு இனிப்பிறப்பில்லை என்பதையே இது காட்டுகின்றது.

இறைவாப்பனை என்ற ஒரு பனைமரமும் இங்குள்ளது. இது மிகவும் தொன்மை வாய்ந்த மரமாகும். கோயிலும் அதன் அருகே நொய்யலாறும் சம்பந்த சரணாலய சுவாமிகள் (C. K. சுப்பிரமணிய முதலியார்) சமாதியும் சாந்தலிங்க அடிகள் திருமடமும் தமிழ்க் கல்லூரியும் இங்கு மிகவும் கண்டு களிகூரத்தக்கன.

இக்கோயில் நடராசர் சந்நிதியின் திருமுன்னுள்ள மண்டபத்தில் காணும் கற்றூண்களின் வேலைப்பாட்டினைப் பார்க்க 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்று ஏங்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. யாவரும் ஒருமுறையாவது பேரூர் சென்று அச்சிற்பச் சிறப்பைப் பார்த்துக் களிகூர்தல் நலம்.

பேரூரில் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் 26—12—64 ல் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்ற

தீர்மானங்கள்

வரலாற்றுப்பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் சில காலமாக தமிழர் நாகரிகம், பண்பாடு, சமயம், சாத்திரம் இவைகளின் தொன்மையையும் பெருமையையும் குறைவுபடுத்தி இழிவுபடுத்தும் வகையில் தவறான கருத்துக்களை நூல்களில் எழுதியும், பேசியும் வருகிறார்.

உதாரணமாக இவ்வாண்டு வெளிவந்த "தமிழரின் பண்பாடும் வரலாறும்" என்னும் அவர் ஆங்கில நூலில் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

(அ) பழம்பொருள் ஆராய்ச்சியிலிருந்து, தென் இந்தியாவின் ஆரியர்கள் வருவதற்கு முன் ஒரு சிறந்த நாகரிகம் இருந்தது என்று சொல்வதற்கு ஆதாரமில்லை.

(ஆ) ஆரியர் வருகைக்கு முன்னிருந்த தமிழர் பண்பாடு அற்ப சொற்பமானது என்று கூறும்படியாக கால்ட்வெல் ஆசிரியர் சித்தரித்திருக்கிறார். அவருக்குப் பின் வந்த எந்த மொழியாராய்ச்சிக்காரர்களும் இச்சித்திரத்தை மறுக்க ஆதாரம் காட்டவில்லை.

(இ) திருநாவுக்கரசர் திருவாரூரில் தோன்றிய வைதிக சைவ வேளாளர்.

(ஈ) மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் ரௌரவ ஆகமத்தில் காணும் சமஸ்கிருத சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு.

(உ) வடநாட்டு சமஸ்கிருதப் பண்பாடு சங்கப் பாட்டுகளில் ஊடுருவி இருக்கிறது.

மேற்கூறிய கருத்துக்கள் ஆதாரமற்றவையாகும்.

வேத காலத்திற்கு முந்திய காலத்திலேயே சில் வழி பாட்டையுடைய திராவிட நாகரிகம் சிந்துவெளியில் மேலோங்கியிருந்தது என்பதும், தொல்காப்பியம் மிகப் பழைய சங்க இலக்கணம் என்பதும், பாரபட்சமில்லாத எல்லா ஆராய்ச்சிக்காரர்களாலும் ஒப்புக்கொண்ட உண் மைகள். ஆனால், சாஸ்திரியார் இக்கருத்துக்களுக்கு மாறு பட்ட கருத்துக்களும் உள என்பதை அக்கறையோடு எழுதிவிட்டு எக்காரணம் பற்றியோ மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் முதல் நூல் என்ற கருத்தும் அறிஞர்களிடையே உண்டு என்பதைச் சுட்டாமலும் விட்டு விடுகிறார்.

சமீபத்தில் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் சாஸ்திரியார் முருகன் தமிழருக்கே உரிய தெய்வம் என்று சொல்வது பொருந்தாது என்றும், முருக வழிபாட்டுக் கொள்கை இரான் (பாரசிகம்) தேசத்திலிருந்து இறக்கு மதியான சரக்கு என்றும் கூறி ஒரு கட்டுரையும் வாசித் திருக்கிறார்.

முன்னொருதரம் சாஸ்திரியார் "ஹிந்து பத்திரிகையில் சிவலிங்க வழிபாட்டின் துவக்கத்தை இழிவாகவும், சேக் கிழார் பெரியபுராணம் ஜைன சவுண்டராய புராணத் தைத் தழுவியது என்றும் எழுதியிருந்தார். இத்தவறான கூற்றுகளுக்கு திரு. நல். முருகேசமுதலியார் அதே பத்திரி கையிலும், 'சித்தாந்தம்' பத்திரிகையிலும் மறுப்பு எழுதி யிருக்கிறார்.

இச்சைவ சித்தாந்த மாநாடு, மேற்குறித்தபடி, சைவத் திற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் விரோதமான ஒரு தலைப் பட்சமான, சாஸ்திரியாரின் போக்கை வன்மை யாகக் கண்டிக்கிறது, சைவர்கள் விழிப்புடன் இருக்கும் படியும் எச்சரிக்கிறது.

சைவ சமயம், சைவ சித்தாந்தம் ஆகியவைகளின் உண்மை வரலாற்று நூல் ஒன்று வெளியிடுவது என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

1965 ஆம் ஆண்டின் சமாஜப் பணியாளர்கள்

பேரூரில் 26—12—64 ல் நடந்த சமாஜ உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் 1965 ஆம் ஆண்டிற்குக் கீழ்க்காணும் சமாஜப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். (ஒவ்வொருவர் பெயரின் முன் ‘திருவாளர்’ என்றும் பின் ‘அவர்கள்’ என்றும் சேர்த்துப் படிக்கவும்)

1. தலைவர் :- ஜி. எம். முத்துசாமி பிள்ளை ; (ஐ. ஏ. எஸ். (ரிடையர்டு)
2. துணைத்தலைவர்கள் :- நல். முருகேச முதலியார் பி. ஏ. தி. கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்
3. செயலாளர் :– C. N. சிங்காரவேல் முதலியார் எம். ஏ.
4. உதவிச் செயலாளர் :- மு. நாராயணசாமி முதலியார்
5. பொருளாளர் :– வி. ஆறுமுக முதலியார்,
6. பத்திராசிரியர் :- மு. அருணசலம் எம். ஏ.,
7. உதவிப் பத்திராசிரியர் :– வித்துவான் அம்பை. சங்கரனர்
8. மாதக் கணக்குப் பரிசோதகர் :– M. சிவராமன்
9. ஆண்டுக் கணக்குப் பரிசோதகர் :– V. திருநாவுக்கரசு

செயற்குழுவினர்:–1. S. இராமசாமி, 2. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ., 3. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., 4. பி. சோ, சண்முகம் பிள்ளை 5. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம்., ஓ. எல்., 6. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் எம். ஏ.. 7. பி. திருஞான சம்பந்தம் பிள்ளை எம். ஏ., எல், டி., 8. ஜி. வடிவேலாயுதம் எம். ஏ., 9. என். டி. கிருஷ்ணசாமி எம். ஏ., பி. டி.. 20. வை குஞ்சித பாதம் பிள்ளை, 11. சி. வி. கிருஷ்ணமூர்த்தி. 12. சந்திரசேகர முதலியார்.

பணியாளர்குழு :– சர். கந்தையா வைத்தியநாதன் (இலங்கை) க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி., சு. நடேச பிள்ளை பி. ஏ பி. எல்., பு. ரா. சுவாமிநாதன் எம். ஏ. எல். டி., மஞ்சக்கொல்லை சம்பந்தமூர்த்தி முதலியார், S. நடராஜ நாடார் பி ஏ., பி. எல்., க. வெள்ளைவாரணம் சிதம்பரம், காமாட்சி அம்மாள் எம். ஏ., ஆறு. அ. ராம. சொக்கலிக்கஞ் செட்டியார், காரைக்குடி.

பத்திராதிபர் ஆலோசனைக் குழு :– எஸ். அம்பிகைபாகன் பி. ஏ., (இலங்கை) வட்டுக்கோட்டை நாகலிங்கம் பிள்ளை (இலங்கை), அருள் தியாகராஜா (இலங்கை) குல. சபாநாதன் (இலங்கை), டாக்டர் எம். இராச

மாணிக்கனர் எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்,, பி. எச். டி. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., சி. எம். இராமச் சந்திரஞ் செட்டியார் பி, ஏ., பி. எல். எம். இ, சரசுவதி எம். ஏ., டாக்டர் தேவசேனுபதி எம். ஏ., பி. எச். டி. வித்துவான் மீனுட்சி சுந்தரசிவை, கா. ராமனுதன் செட்டியார், கி. இராமலிங்கனுர் எம். ஏ.,

ஆராய்ச்சிக் கழகம் :— மேலேயூர் மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள். வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம், வித்துவான் சொ. சிங்காரவேலனுர், வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்., வித்துவான் அருணேவடிவேல் முதலியார்.

வெளியூர் ஆலோசனைச் சபையினர் :—

செங்கல்பட்டு :—வித்துவான் நடராஜ பிள்ளே, திருவள்ளுர், வித்துவான் திருஞான சம்பந்த முதலியார் காஞ்சி, கே. இராஜு முதலியார், பழையனூர் சுந்தர முதலியார், நா. பா. தணிகையரசு. வா. தி. மாசிலாமணி முதலியார்.

தென்னுர்க்காடு:— பொன்னம்பலம்பிள்ளே, இரத்தின சாமிச் செட்டியார், சி. பாலசுப்பிரமணிய ரெட்டியார், கெ. ஆறுமுக நயினுர், ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், மு. அஸ்வத்தாம ரெட்டியார், மணந்தவிழ்ந்த புத்தூர், ரா. சம்பந்தம்.

புதுவை :— சேனுபதி முதலியார், R. S. பழமலே.

காரைக்கால் :— திரு. சொ. தட்சிணுமூர்த்தி முதலியார், கே. எஸ் எஸ். நடேச முதலியார்.

தஞ்சாவூர் :— டாக்டர் அழகப்பா அண்ணுமலே, ஆர். திருநாவுக்கரசு முதலியார், கும்பகோணம், T. S. சுவாமி நாத முதலியார், T. நாகலிங்கம் பிள்ளே.

திருச்சிராப்பள்ளி :— அரிமழம் ராம. அண. அண்ணுமலேச் செட்டியார், ஜி. வரதராஜப் பிள்ளே பி ஏ., பி. எல்.. செல்லப்பச் செட்டியார். P. M. R. S; அ. ராமநாதன் செட்டியார் பூவாளுர்.

இராமநாதபுரம்:— சேவு. மெய்யப்பச் செட்டியார், சொ. நாராயணன் செட்டியார், சிடி. எம். என். நாராயணன் செட்டியார், ஆர். எம். எஸ். திருநாவுக்கரசு செட்டியார், காசிநாத துரை.

மதுரை :– கே. அரங்கசாமி முதலியார். பி. ஏ., வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை, புஷ்பம் நடராஜன், G. கல்யாணம் பிள்ளை, தி. சுந்தரம் செட்டியார்.

திருநெல்வேலி :- வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பா சமுத்திரம், வித்துவான்மறை திருநாவுக்கரசு, எஸ். எஸ். அருணுசலம் பிள்ளை. பாஸ்கரத் தொண்டைமான்.

வடஆர்க்காடு :- புரிசை–முருகேச முதலியார், வி. எஸ்· கணபதி முதலியார் தெள்ளாறு.

கன்னியா குமரி :- சி. வள்ளிநாயகம் பிள்ளை பி. ஏ., பி, எல்., குமரேச பிள்ளை - வித்துவான், Dr. பா. நடராஜன் M. L. A.

சேலம் :– வள்ளி செட்டியார் பி. ஏ., பி. எல்., அ. கு. காமாட்சி அம்மையார் எம். ஏ., அப்பாய் செட்டியார்.

கோயம்பத்தூர் :– கே. பி. ஆர். சுப்பராயன், சிவகிரி, எஸ் மீனுட்சி சுந்தர முதலியார் பி. ஏ.. எல். டி., சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி. ஏ., பி. எல்., இராமசாமி அடிகள், சி. ஆர். சதாசிவ முதலியார், T. R, சுந்தரம் பிள்ளை ரா. ஆறுமுகம், புளியம்பட்டி.

பெங்களூர் :– ஏ. ஆர். அண்ணுமலை முதலியார், எஸ். கனக சபாபதி பிள்ளை.

யாழ்ப்பாணம் :- வட்டுக்கோட்டை நாகலிங்கம் பிள்ளை S, நடேச பிள்ளை, பி. ஏ., பி. எல், ஏ. அருளம்பலம், முத்துத்தம்பி, எஸ். அம்பிகைபாகன் பி. ஏ., ஞானப்பிரகாசம்.

கொழும்பு :– சர். கந்தையா வைத்தியநாதன், குலசபாநாதன்; அருள் தியாகராஜா, சபாபதிப் பிள்ளை.

திருக்கோணமலை :- பண்டித ஆர். வடிவேலு, எஸ். அம்பலவாணன்.

மட்டக்களப்பு :- க. அருணுசலதேசிகர், பூபாலபிள்ளை.

மலாய்நாடு :– கே. இராமநாதன் செட்டியார், பி. ஏ. பி. எல்., சிவநோயன், அ. மு. பெரியசாமி பிள்ளை, ஆர். வி. கந்தையா, எம், இராமசாமி முதலியார். கோவிந்தசாமி பிள்ளை, சிங்கப்பூர்.

சமாஜ மணிவிழாக் கமிட்டி

தலைவர் :— அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.,

செயலாளர் :— தி. கி. நாராயணசாமி நாயுடு

உறுப்பினர்கள் : புலவர். ந. ரா. முருகவேள், மு. அருணுசலம் சி. என். சிங்காரவேல் முதலியார்; ஜி. கல்யாணம் பிள்ளை.

பிற செய்திகள்

திருப்போரூர் தேவத்தானத்தின் சார்பில் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரைவிளக்க வெளியீட்டு விழா 22-12-64 மாலை 5-15 மணிக்கு சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தது. துணைவேந்தர் A. இலக்குமணசாமி முதலியார் தலைமையில் கனம் திரு பக்தவத்சலம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு S. சாரங்கபாணி முதலியார் வரவேற்க உரைவிளக்க ஆசிரியர் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார் அந்நூலை முதலமைச்சருக்கு உரிமையாக்கினார். டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், மகா வித்துவான் மே. வீ. வேணுகோபால் பிள்ளை, திரு. K. பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பொம்மபுர ஆதீனம் மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் ஆசியுரை வழங்கியருளினார்கள். துணை ஆணையர் நன்றிகூறலுடன் விழா இனிது முடிந்தது. ஆலய பரம்பரை தர்மகர்த்தர் அருள் திரு சிதம்பர சிவப்பிரகாச அடிகளார் யாவற்றையும் செம்மையுறக் கவனித்து நிகழ்த்தித் தந்தது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை நிறுவிய திருமதி சொர்ணம்மாள் சொற்பொழிகள் 1964—65

இவ்வாண்டு சொற்பொழிவுகள் திரு நல். முருகேச முதலியார் அவர்களால் "திருக்குறளில் அரசியல்" என்ற பொருளைப்பற்றி ஜனவரி 1605, 26, 28, 29 தேதிகளில் மாலை 5-15 மணிக்கு சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மணிமண்டபத்தில் நிகழ்த்தப்பெறும் யாவரும் வருக. பேராசிரியர் சேதுப்பிள்ளை தந்த மூலதனத்தால், தமது அன்னையார் பேரில் இச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு ஆறும் ஆண்டாகும்.

அகில இந்திய தத்துவஞான மாநாடு-1964
(Indian Philosophical Congress)

இம்மாநாடு சென்னையில் 26 ஆண்டுகளுக்குப் பின் டிசம்பர் 27 முதல் 31 வரை கூடியது. சென்னை கவர்னர் திரு சந்திரா ரெட்டி அவர்கள் துவக்கி வைத்தார்கள். திரு K. பாலசுப்பிரமணிய அய்யர் M. L. C. வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அமைச்சர் திரு R. வெங்கடராமன் விழாமலரை வெளியிட்டார்கள். வேதாந்த வித்தகர் டாக்டர் T. M. P. மகாதேவன் நன்றி நவின்றார்கள். காஞ்சி சிருங்கேரி மடங்களும் மற்றும் பலரும் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள். (சைவ மடங்களிலிருந்து ஒன்றும் வரவில்லை.) மாநாட்டுத் தலைவர் டாக்டர் மீர் வலியுடீன் (ஊஸ்மானியா பல்கலைக் கழகத்து முன்னைய தத்துவத்துறைத் தலைவர்) "பயமும் துன்பம்—சூபி கொள்கை" என்ற பொருளைப்பற்றி தலைமை உரை நிகழ்த்தினார்கள். பயமும் துன்பமும் கர்மபலன் என்றோ, கடவுளின் தண்டனையென்றோ கருதுதல் ஆகாது. கடவுளின் திருவுள்ளம் என்றும், அதை நன்மையாகவே கொளல் வேண்டுமென்றும் கூறினார். மாநாட்டையொட்டி புத்தகக் கண்காட்சியும் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மணிமண்டபத்தில் நடைபெற்றது. தத்துவத் துறையைச் சேர்ந்த பன்மொழி நூல்கள் பல காணப்பட்டன. திருநெல்வேலி சைவ சித்தாந்தக் கழக நூல்களும் இடம் பெற்றிருந்தன. சமாஜ நூல்களை வைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று.

திரு. K. இராஜு முதலியார் அறுபதாண்டு விழா

நம் சமாஜப் பேரன்பர் கைவண்டூர் திரு K. இராஜு முதலியார் அவர்களுக்கு 7-12-64 அன்று அறுபதாண்டு நிறைவுவிழா நிகழ்ந்தது. திருவாளர் முதலியார் அவர்கள் நம் சமாஜ வளர்ச்சியில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பல மாதச் கூட்டங்களைத் தம் சொந்தச் செலவில் நிகழ்த்தித் தந்துள்ளார்கள். அவ்வப்போது உறுப்பினர்களைச் சேர்த்

தும் மற்றும் பல்லாற்றானும் உதவியும் வந்துள்ள ஒரு பெருநிலக்கிழார் ஆவர். கிறித்தவ சமயத்தினர் தங்கள் வீட்டில் நிகழ்வுறும் நற்செயல்களில் எல்லாம் சமயத்தின் வளர்ச்சி கருதியும் ஒரு சிறு தொகை வழங்குவதுண்டு. அம்முறையை மேற்கொண்டு இப் பெரியார் அவர்களும் நம் சமாஜத்திற்கு சமய வளர்ச்சியின் ஆர்வம் காரணமாக 25 ரூபாய்கள் நன்கொடை வழங்கியுள்ளார்கள். இதனைப் போன்று பிற அன்பர்களும் செய்ய முனைவார்களேயானால் சமாஜக் கட்டிடம் எழும்பி எத்தனையோ ஆண்டுகள் ஆகியிருக்கக்கூடும். சிறந்த பண்பாடு மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்து செங்கை மாவட்டப் பகுதியில் நம் சமய வளர்ச்சி கருதி அல்லும் பகலும் உழைத்து வருகிற திரு. முதலியார் அவர்கள் குடும்பம் நாளும் தழைவதாகுக. அவர்கள் எல்லா நற்பேறுகளுமினிதுற்று இன்னும் சமயத் தொண்டில் முனைந்து நீடு வாழ எல்லாம்வல்ல இறையருளை வழுத்துகின்றோம். சமாஜ அன்பர்கள் பலரும் வாழ்த்தனுப்பினர்.

ஆசிய கிறித்தவ மாநாட்டில் மலேயா சிவத்திரு கா. இராமநாதன் செட்டியார்.

பிலிப்பைன்ஸ் தீவுகளின் தலைநகரமான மணிலாவில் ஆசிய கிறித்தவ இளைஞர் மாநாடு 28—12—64 முதல் 10—1—65 வரை நடைபெறும்.

இந்து சமயத்தின் பிரதிநிதியாக சைவப் பெரியார்திரு. கா. இராமநாதன் செட்டியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் அழைக்கப் பெற்று அம்மாநாட்டில் கலந்துள்ளார். ஆசியா முழுவதுமிருந்து 500க்கு மேற்பட்ட கிறித்தவ இளைஞர்கள் இம்மாநாட்டில் பங்கு கொள்வார்கள். இம்மாநாட்டில் "வாழ்க்கையின் குறிக்கோளும் பண்புகளும்" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார் செட்டியார்; அவர் மணிலாவில் 14 நாட்களும், மணிலாவுக்குச் செல்லும் வழியில் செய்கோனில் இரண்டு வாரமும் தங்கி சிவத்தொண்டு புரிவார்,

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றை கூடிய விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி. யில் அடுத்த மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாகஅதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தாஅனுப்புவோர்

1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3.தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத்தொகையினை தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு: கே. இராமநாதன் செட்டியார் B, A. B. L, அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர்; சென்னை-4.

பொன்மொழிகள்

தேச விடுதலைக்கு உழைக்கும் தன் தோழனிடம் பண்டித நேரு பின் வருமாறு கூறினார்:—

"நாம் சிறிய மனிதர்கள், முக்கியமில்லாதவர்கள், ஆனால் நாம் எந்தக் குறிக்கோளுக்காக உழைக்கிறோமோ அந்தக் குறிக்கோள் பெருமையுடையது; அப்பெருமை நம் ஒவ்வொருவரையும் தொடுகிறது".

சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜான்சன் ஒரு கூட்டத்தில் பேசுகையில் இச் சொற்களை நினைவு படுத்தி,

பொதுப்பணியின் தத்துவமே இச்சொற்களில் அடங்கியிருக்கிறது என்று சொன்னார்.

சைவ சித்தாந்த சமாஜம் பெருமையுடையது. அதற்குச் செய்யும் தொண்டால் நாம் பெருமையடைகிறோம். ஒவ்வொரு உறுப்பினரும் புத்தாண்டின் முதல் தொண்டாக பத்து உறுப்பினர்களைச் சேர்த்து சமாஜத்தைப் பலப்படுத்திப் பெருமையடைவார்களாக!

—கொ. நீ. சி.

சமாஜ ஆண்டு விழா

நம் சைவ சித்தாந்த மகா சமாஜ 59 ஆம் ஆண்டு விழா பேரூரில் சிறப்பாக நடந்தது. அதன் நிகழ்ச்சி பற்றிய விளக்கக் கட்டுரை அடுத்த மாத இதழில் வெளிவரும்.

மதிப்புரை

திருத்தணிகை முருகப்பெருமான் திருப்பதிகங்கள் என்ற நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில் அண்ணா என யாவராலும் வழங்கப்பெறும் திரு. நா. ப. தணிகையரசு அவர்கள் ஆவர். தன் பெற்றோர்களுக்குரிய அரிய படையலாக இந்நூலை குரோதி யாண்டு கார்த்திகைத் திங்கள் சஷ்டியில் இயற்றி வெளியிட்டிருக்கிறார். இதில் தெய்வப் பத்து, அடைக்கலப் பத்து என 10 பத்துக்கள் உள்ளன. மொத்தம் 100 பாடல்கள் உள. இந்நூல் திருத்தணி முருகப் பெருமானுடைய பெருமையைத் தெற்றென விளக்குகின்றது. இந்நூலிலிருந்து இவ்வாசிரியர் திருவாசகத்தில் எவ்வாறு ஈடுபாடு கொண்டவர் என்பதையும் அதைப்போன்றே தன் வழிபடு கடவுளாய திருத்தணி முருகப் பெருமானுக்கும் ஒரு நெஞ்சுருக்கும் நூலியற்ற ஆவல் கொண்டிருந்தார் என்பதையும் அதன் பயனால் இது வெளிவந்துள்ளதென்பதையும் அறிந்து கொள்ளலாம். மிகவும் நல்ல ஓசை, பொருள், உருக்கம் உடையன. விலை குறிக்கப்பெறவில்லை.

—(அம்பை, சங்கரன்)

சிவமயம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம்: 1905—பதிவு: 1915)

59-வது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு. ஞானியாரடிகள் திரு மடத்தில், விசுவாவசு ஆண்டு, ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (*7-7-1905*) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. இன்றுவரை இறைவன் திருவருளால் மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெரு நோக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றது. எஸ் *6/1915–16* என்ற எண்ணில் இச்சமாஜம் *11-11-1915*-ல் சபைகளின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப் பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்: திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

துணைத் தலைவர்கள்: திரு. ராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி. ஏ.

திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்.

செயலாளர்: திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம். ஏ.

துணைச் செயலாளர்: திரு. மு. நாராயணசாமி முதலியார்.

பொருட்காப்பாளர்: திரு. வி. ஆறுமுக முதலியார்.

பத்திராசிரியர்: திரு. மு. அருணாசலம், எம். ஏ.

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் திரு. அம்பை இரா. சங்கரனார்.

செயற்குழுவினர் : திருவாளர்கள் - (1) அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ., (2) ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., (3) சிவநேசன் செட்டியார், (4) ந. ரா. முருகவேள், எம். ஏ., எம்.ஓ.எல்., (5) பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ., (6) பி. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி., (7) ஜி. வடிவேலாயுதம், எம். ஏ., (8) நே. த. கிருஷ்ணசாமி, எம்.ஏ., பி.டி., (9) கே. சி. நாகலிங்க முதலியார், (10) தி. சே. பழனிவேலு, (11) எம். சந்திரசேகர முதலியார், (12) சி. ஒய். அமலநாதன்.

3. சமாஜத்தின் 58-வது ஆண்டு நிறைவு விழா

மேற்படி விழாவும், சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், 27, 28, 29-12-1963களில் புதுவையில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மேற்படி மாநாடுகளுக்கு முறையே மலேயா - திரு. கா. இராமநாதன் செட்டியார், பி.ஏ., பி.எல்., அவர்களும், திருமதி மீனாட்சி நல்ல கிருஷ்ண அம்மையார் அவர்களும், தவத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்களும் தலைமை தாங்கினார்கள். இவ்விழாவில், கோவை - இராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரம் செட்டியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் கொடியேற்றிவைத்தார்கள். அப்போது புதுவை மாநில முதல் அமைச்சராயிருந்த திரு. எத்வார் குபேர் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். சமாஜ வெளியீடாகத் திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள் எழுதிய 'சிவலிங்க வழிபாடு' என்ற நூலைச் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் வெளியிட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். இவ்விழாவையும் மாநாடுகளையும் திருவாளர்கள் - அ. சேனாபதி முதலியார், செ. சென்னியப்ப முதலியார் உள்ளிட்ட ஸ்ரீ வேதபுரீசுவரர் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் நூல் நிலைய நிர்வாகக் குழுவினர் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள்.

4. அந்தர்யோகங்கள்

இவ்வாண்டு, மலேயா - திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் வருகையால் சமாஜத் தொண்டு

பல புது வகைகளில் சிறப்புற்றன. அவற்றில் ஒன்று அந்தர் யோகம். அன்னர் தலைமையில் இவ்வாண்டு மூன்று அந்தர் யோகங்கள் நடைபெற்றன. முதல் அந்தர் யோகம் 8-3-64-ஆம் தேதி வாலாஜாபாத் இந்துமத பாடசாலையிலும், இரண்டாம் அந்தர்யோகம் 11, 12-4-64 ஆகிய இருநாட்களில் திருவான்மியூரிலும், மூன்றும் அந்தர் யோகம் 24-4-64 ஆம் தேதியில் பழனி யம்பதியிலும் நடைபெற்றன. முதல் அந்தர் யோகத் திற்கும் மூன்றும் அந்தர் யோகத்திற்கும் முறையே, வாலாஜாபாத் உயர்திரு.வா. தி. மாசிலாமணி முதலி யார் அவர்களும், தாராபுரம் தாலூகா சங்கரண்டாம் பாளையம் உயர்திரு. அ. சேனபதி கவுண்டர், எம். எல். ஏ., அவர்களும் ஏற்பாடு செய்து பொருட் செலவை ஏற் றுக்கொண்டார்கள். இரண்டாம் அந்தர் யோகத்திற் கான செலவின் பெரும்பகுதி பலர் ஏற்றுக்கொண்டார் கள். எஞ்சிய தொகையை சமாஜம் ஏற்றுக்கொண்டது.

5. பொதுக் கூட்டங்கள்

2-3-64 முதல் 4-3-64 வரை மூன்று நாட்களில் மயிலை கபாலீச்சுரர் கோவிலில் மலேயா திரு. கா. இராம நாதன் செட்டியார் அவர்கள் "இதுவும் ஒரு வழி", "அவன் தெய்வம்", "பெருவாழ்விற்கு மூன்று குணங் கள்" என்பன பற்றி அரிய விரிவுரைகளாற்றினர்கள். மூன்று நாட்களிலும் முறையே, சைவத் திருவாளர்கள் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., கீ. இராம லிங்க முதலியார், எம். ஏ., எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமை வகித் தார்கள்.

6. கூட்டு வழிபாடு

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர் கள் மயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவிலில் 16-4-'64 அன்று காலை கூட்டு வழிபாட்டு முறையைத் தொடக்கி வைத் தார்கள். அது தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது.

*

7. முதியோர் தேவார வகுப்பு

13-4-64 அன்று மயிலாப்பூர் வணிக வைசிய மண்டபத்தில் முதியோர் தேவார வகுப்பு ஒன்று இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களால் தொடங்கப் பெற்றது. அத்தொடக்க விழாவிற்குத் திருமுறை காவலர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., தலைமை தாங்க, மயிலைக் கபாலீசுரர் அறங்காவலர்கள் குழுத் தலைவர் திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்களும், மலேயா - திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்களும் முறையே சிறப்புச் சொற்பொழிவும், ஆசியுரையும் வழங்கினர்கள். இவ்வகுப்பு ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8-30 முதல் 10 மணி வரை மயிலை வெள்ளீஸ்வரர் கோவிலில் நடந்து வருகிறது. பல அன்பர்கள் திருமுறைகளை இசையுடன் கற்று வருகிறார்கள்.

8. பாராட்டி வழியனுப்புதல்

சமாஜ அழைப்புக் கிணங்கி, மலேயாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து சைவத் தொண்டு புரிந்து 19-5-64 மலேயா திரும்பிய திரு. கா. இராமநாதன் செட்டியாரைப் பாராட்டி வழியனுப்ப 18-5-64 மாலை இராயப்பேட்டையில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்குத் திரு. இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி. ஏ., அவர்கள் தலைமை தாங்கினர்கள். பலர் அவர்கள் ஆற்றிய தொண்டைப் பாராட்டிப் பேசினர்கள்.

9. சேக்கிழார் திருநாள்

14-6-64 தேதியில் மாலை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் சேக்கிழார் திருநாள் திரு. கி. இராமலிங்க முதலியார் தலைமையில் நடைபெற்றது. திரு. ம. ரா. இளங்கோவன் அவர்கள் “தொண்டர்தம் பெருமை” என்னும் பொருள் பற்றியும்

வித்துவான் அம்பை இரா. சங்கரனுர் அவர்கள் "சேக்கிழார் கவிநயம்" என்னும் பொருள் பற்றியும் விரிவுரை ஆற்றினர்கள்.

10. கருத்தரங்கு

3-7-64-ஆம் தேதியில் இராயப்பேட்டை திரு. வி. க. மணிமண்டபத்தில், "பண்டித நேருவின் வாழ்க்கையில் சமயம்" என்னும் பொருள் பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் தலைமைவகிக்கத் திருவாளர்கள்-ச. சச்சிதாநந்தம் பிள்ளை, எம். கே. தங்கவேலு, டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, ச. சிவகுமாரன் ஆகியோர் அவ்வரங்கில் கலந்து கொண்டார்கள்.

11. சுந்தரர் திருநாள்

23-8-64 அன்று, மாலை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபையில் "சுந்தரர் திருநாள்" கொண்டாடப் பெற்றது. அதுபோழ்து, திரு. ச. சிவகுமாரன் அவர்கள் தலைமை வகிக்க, திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் "சுந்தரரின் தனிச் சிறப்பு" என்னும் பொருள் பற்றி விரிவுரை ஆற்றினர்கள்.

12. அருள்நந்தி சிவாச்சாரியார் குருபூஜை விழாவும் திரு. ந. ரா. முருகவேள் அவர்களுக்குப் பாராட்டு விழாவும்

4-10-64 அன்று, மாலை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபையில், டாக்டர் - பி. நடராஜன், எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் "அருள் நந்தி சிவாசாரியார் குருபூஜை விழா" நடந்தது. அவ் வமயம் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் "அருள் நந்தி சிவம்" என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள். மேலும், திரு. முருகவேள் அவர்கள் சமாஜச் சார்பில் "சிவஞான சித்தியார்" வகுப்பைச் சிறப்பாக நடத்தி முடித்தமைக்குப் பாராட்டு விழாவும் நிகழ்ந்தது. பலர் பாராட்டில் கலந்து கொண்டார்கள்.

13. ஸ்ரீ. மெய்கண்ட தேவர் குருபூஜை விழாவும் திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவும்

15-11-64-ஆம் தேதி மாலை, தியாகராய நகர், தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில் மேற்குறித்த இரண்டு விழாக்களும் திரு. இராவ்சாகிப் நல். முருகேச முதலியார் தலைமையில் நடைபெற்றன. திருவாளர்கள் - டாக்டர் - டி. எம். பி. மஹாதேவன், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், ந. ரா. முருகவேள், மு. அருணசலம், ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, தி. கி. நாராயணசாமி நாயுடு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

14. மாணவர்களுக்குச் சைவ சித்தாந்தப் பேச்சுப் போட்டி

பி. யு. சி. தேர்வில் தேறிக் கல்லூரியில் பயிலும் பி. ஏ. அல்லது பி. எஸ்சி., முதலிய பட்டப்படிப்பு மாணவர்களுக்குச் சித்தாந்தப் பேச்சுப் போட்டி ஒன்று நிகழ்த்துவது என்றும் இவ்வாண்டு, சென்னை நகரம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை மாத்திரம் இப் போட்டியில் அனுமதிப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டது. விண்ணப்பங்களைக் கோரி கல்லூரிகளுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டன. ஆனல் போதிய மாணவர்கள் போட்டியில் கலந்துகொள்ள முன் வராததால் இப்போட்டி தள்ளி வைக்கப்பெற்றிருக்கிறது.

15. மாணவர்களுக்குச் சித்தாந்தக் கோடை வகுப்பு

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் *1-5-64* முதல் *20-5-64* முடிய இளைஞர்களுக்குச் சைவ சித்தாந்தக் கோடை வகுப்பு ஒன்று சிறப்புற நடைபெற்றது. திரு. ச. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள் *1-5-64* இல் வகுப்பினைத் தொடங்கி வைத்தார்கள். உள்ளூர் வெளியூர்களிலிருந்து 45 மாணவர்கள் பங்கு கொண்டனர். 25 அறிஞர்கள் பல்வேறு தலைப்புகளில் வகுப்புகள் நடத்தினர். கடைசி நாளில் தேர்வுகள் நடந்தன. திரு. அ. சோம

சுந்தரம் செட்டியார் அவர்கள் வகுப்பு நிறைவு விழாவுக்குத் தலைமை தாங்கி நற்சான்றிதழ்கள் வழங்கினர்கள். இவ்வகுப்பு வாலாஜாபாத் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் நன்முயற்சியால் அவர் செலவில் நடைபெற்றது.

16. சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பு

தஞ்சை மாவட்டம் மஞ்சக்கொல்லையில் 13-5-64 முதல் 28-5-64 வரை சித்தாந்தக் கோடை வகுப்பு நடைபெற்றது. திரு. மு. அருணசலம், திரு. அருணை வடிவேலு முதலியார், திரு. சு. சுவர்ணகாளீஸ்வரன் அவர்கள் 13-5-64 முதல் நான்கு நாட்கள் வகுப்பு எடுத்தனர். 17-5-64 முதல் 28-5-64 வரை திரு. க. வஜ்ஜிரவேல் முதலியார் அவர்கள் சிவப்பிரகாசம், கந்தர் கலிவெண்பா ஆகிய இரண்டு நூல்களையும் பாடமாக நடத்தினர்கள். இவ்வகுப்பை மஞ்சக்கொல்லை திருஞானசம்பந்த சபையார், இராமசாமி முதலியார் சமய அபிவிருத்தி நிதி உதவியால் சிறப்புற நடத்தினர்கள்.

17. சமாஜத் தேர்வு

1963-ல் நடந்த சமாஜத் தேர்வில் 3 பேர் சைவப் புலவர் தேர்விலும், 10 பேர் இளஞ் சைவப் புலவர் தேர்விலும் வெற்றி பெற்றுர்கள். திரு. குமரேசன் மனேன் மணி என்பவர் சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றதால், பரிசுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூல நிதியிலிருந்து மூன்ருண்டாகச் சேர்ந்துள்ள வட்டித் தொகை ரூ. 150/-ஐ அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டது. இவ்வாண்டு 28-11-64, 29-11-64 ஆகிய இரண்டு நாட்களில் தேர்வுகள் நடைபெற்றன.

18. பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்கள்

இவ்வாண்டில் பொது உறுப்பினர் கூட்டம் இரண்டும், செயற்குழுக் கூட்டம் பன்னிரண்டும் நடைபெற்றன.

19. பொருள் நிலை

58-ஆவது ஆண்டு 1-12-63 முதல் 30-11-64 முடிய உள்ள வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட் வரவு செலவு கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப் பேடும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

20. விண்ணப்பம்

சமாஜத்திற்கெனத் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் 20,000 ரூபாய் செலவில் வாங்கிக் கொடுத்த கட்டடம் மூன்று கடைகளாக அமைந்திருக் கின்றன. தற்போது சமாஜ அலுவலகம் வாடகைக் கெடுத்துள்ள சிறு அறைகளில் இருக்கிறது. அங்கு வகுப்புகள் நடத்துவதற்கோ, நூல் நிலையம் அமைப் பதற்கோ, கூட்டங்கள் கூடுவதற்கோ தக்க இடவசதி யில்லை. ஆகையால் சமாஜத்திற்கென ஒரு கட்டடம் இல்லாத குறை இருந்துகொண்டிருக்கிறது. திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் கட்டட நிதிக்கென ரூ. 6000/- வழங்க முன்வந்து ரூ. 4000/- சமாஜத்திற்கு வழங்கியுள்ளார்கள். மீதி ரூ. 2000/- எதிர்பார்க்கப் படுகிறது. இத்தொகை பன்மடங்கு பெருகினாலல்லது சமாஜத்தின் குறை நீங்காது. இக்குறையை அகற்றுவது சைவர் கடமையாகும்.

நம் சமாஜ அங்கத்தினர் எண்ணிக்கை தற்போது 851 ஆக உள்ளது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சித் தாந்த இதழ் இலவசமாக அனுப்புவது யாவருக்கும் தெரிந்ததே. ‘சித்தாந்த’ இதழை இன்னும் கூடுத லான பக்கங்களுடன் சிறப்பாக நடத்த வேண்டு மென்பது சமாஜ செயற்குழுவின் அவா. ஆனால் சமாஜ அங்கத்தினர் எண்ணிக்கை தற்போது உள்ளதைக் காட் டிலும் இருமடங்கு பெருகினாலன்றி நம் சமாஜ வெளி யீட்டை விரிவுபடுத்துவது அருமை. புத்தாண்டில் உறுப் பினர்கள் ஒவ்வொருவரும் 10 புதிய உறுப்பினர்களை யாகிலும் சேர்த்துக் கொடுப்பதைத் தங்கள் தலையாய கடமையாகக்கொள்ள வேண்டும்.

சேலம், காரைக்குடி நகரசபைகள் முறையே 27 சித்தாந்த இதழ்களும், 7 சித்தாந்த இதழ்களும் வாங்கி அங்குள்ள வாசகசாலைகளுக்கு விநியோகிக்கின்றன.

அந்நகரசபை நிர்வாகிகளுக்கு சமாஜத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மற்ற நகரசபைகளும் இவ்வாறே சித்தாந்தத்தை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

21. நன்றி

இம்மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த மறைமலையடிகளார், சித்தாந்தப் பேரறிஞர் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ஆகியோருக்கு சமாஜம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

'சித்தாந்தம்' பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியனுப்பிய அன்பர்களுக்கும், சமாஜக் கூட்டங்களை அடிக்கடி நடத்த இடந்தந்துதவும் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினர், திருமயிலைக் கபாலீச்சுரர் கோயில் நிர்வாகக் குழுவினர், வணிக வைசிய மண்டபப் பரிபாலனத்தார், மயிலை ஸ்ரீ வெள்ளீஸ்வரர் கோயில் நிர்வாகக் குழுவினர், தருமையாதீன குரு மகா சந்நிதானம் ஆகிய அனைவருக்கும் சமாஜம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. புதிய உறுப்பினர்களை இவ்வாண்டு சேர்த்துதவிய சைவப் பெருமக்களுக்கும் "சித்தாந்தம்" இதழை அச்சிட்டளிக்கும் செங்குந்த மித்திரன் அச்சகத்தினருக்கும் சைவப்பணியை நடத்திவரும் எல்லாச் சைவ மக்களுக்கும் சமாஜம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாழ்க சமாஜம்! விளங்குக சைவம்!

செயற்குழுவினர் அனுமதிப்படி
இங்ஙனம்

சென்னை
20—12—'64.

கொ. நீ. சிங்காரவேலு
மு. நாராயணசாமி
செயலாளர்கள்

சைவ சித்தாந்த மகா சமாஜ 59-ஆம் ஆண்டு வரவு செலவுத் தொகுப்பேடு

(1—12—63 முதல் 30—11—64 வரை)

வரவு	ரூ.	பைசா
ஆரம்பக் கையிருப்பு	12	71
வங்கி யிருப்பு (S. B. Account)	815	39
தவணை வைப்புத் தொகை	7500	00
சந்தா வரவு முதலியன	1924	30
ஆயுள் சந்தா	501	00
வங்கி வட்டி வரவு	396	19
58-ஆம் ஆண்டு விழா வரவு	422	00
தேர்வுக் கட்டணம்	8	00
இதர வரவு	38	00
புத்தகக் கணக்குக்குத் தந்த தொகை திரும்பப் பெற்றது	100	00
புத்தகக் கணக்கு வரவு	385	47
	12103	06

செலவு	ரூ.	பைசா
அச்சுவகைக் காகிதங்கள் முதலியன	653	84
சித்தாந்தம் அச்சுக்கூலி முதலியன	1180	00
தவணை வைப்புத் தொகை	7500	00
தபாற் செலவு (வி. பி. பி. உள்பட)	351	53
போக்கு வரவு செலவு	146	23
விழாச் செலவு முதலியன	104	84
அலுவலக மின்சாரக் கட்டணம் (12 மாதம்)	24	00
எழுதுவகைச் சாமான்களும் பிறவும்	19	93
பழைய சித்தாந்தங்கள் வாங்கியசெலவு	30	00
இதர வரவு திருப்பித்தரப் பெற்றது	38	00
58-ஆம் ஆண்டு விழாச் செலவுகள்	891	59
அறப்பயிற்சி மாலை விற்றதைத் தந்தது	60	90
சித்தாந்தக் கணக்கிலிருந்து பெற்ற தொகையைத் திருப்பித் தந்தது	100	00
புத்தகக் கணக்கின் செலவுகள்	134	33
வங்கி யிருப்பு (S. B. Account)	762	53
சித்தாந்தம் - புத்தக வகைக் கணக்குகளின் கை இருப்பு	105	34
	12103	06

சமாஜப் பொருள்நிலை:	கையிருப்புப் புத்தகங்களின் (விற்பனை) மதிப்பு	ரூ. 3861	84
	பழநி - திரு. கே. ஓ. பெருமாள்சாமி பிள்ளை அவர்களிடம் விற்பனைக்கு உள்ள புத்தக மதிப்பு	ரூ. 47	08
	கடன் பில் ஒன்று வரவேண்டிய வகையில்	ரூ. 130	00

எம். இ. சிவஞானசம்பந்தம், ஆண்டுக் கணித பரிசோதகர்

எம். சிவராமன், மாதக் கணித பரிசோதகர்

வி. ஆறுமுகம், பொருளாளர்

கோ. நீ. சிங்காரவேலு, மு. நாராயணசாமி, செயலர்கள்.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட்

(எண் 2, 3, 4, ஈவினிங் பஜார் கடைகள்) வரவு செலவுத் தொகுப்பு

1—12—63 முதல் 30—11—64 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் ரொக்க இருப்பு	396	51	சமாஜ அலுவலக வாடகை	300	00
,, பாங்கி ,,	270	10	தேவார ஆசிரியர் சம்பளம்	960	00
வாடகை வரவு	2274	00	வரி	209	84
வட்டி ,,	7	09	சமாஜத்திற்குக் கொடுத்தது	220	00
			பின் ரொக்க இருப்பு	578	51
			பின் பாங்கி ,,	679	35
	2947	70		2947	70

சென்னை
20—12—64

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.,
கட்டட டிரஸ்ட் தலைவர்

முருகன் அச்சகம், சென்னை-14

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

59-ஆம் ஆண்டு நிறைவு விழா, பேரூர்

இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை

(பி. ஜி. வரதராஜன், பி,ஏ.)

(26-12-64)

''ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி''

சைவப் பெருமக்களே! தாய்மார்களே! இளைஞர்களே!

பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறந்த சைவ சித்தாந்த சமாஜ நிகழ்ச்சியில் நானும் பங்கு பெற வாய்ப்பு அளித்தமைக்கு சமாஜப் பெரியோர்களுக்கும் அன்பர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கம் உரித்தாகின்றது. எதிர்காலச் சந்ததிகளாகிய நம் இளைஞர்களுக்கு என்னுலியன்ற சில நல்ல வழிகளைத் தெரிவிப்பதற்குக் கிடைத்த இவ்வாய்ப்பிற்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

சமய உலகத்தில் இளைஞர்களுக்கென்றே நாம் சிலவற்றைச் சொல்ல வேண்டியுள்ளது. இப்பொழுது எங்கும் பரவலாக ஒரு கருத்து சொல்லப்பட்டு வருகிறது. அது, நம் இளைஞர்களிடத்தில் நாளுக்கு நாள் சமயப்பற்று குறைந்து கொண்டே வருகிறது என்பதேயாகும். இதில்

ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. இதற்குக் காரணம் என்ன? நமது சமய உண்மைகளையும், பெருமைகளையும் உணர்வதற்குரிய வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டாமையேயாம். அத்தகைய வாய்ப்புக்களை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வன, இத்தகைய சமயப் பேரவைகளேயாகும். இவைகளை இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம் சைவ சமயப் பேருண்மைகள் சிலவற்றை எடுத்து விளக்குதல் பொருந்துவதாகும்.

சைவ சமயத்தின் தலையாய உண்மை, இறைவனை அடைதற்குரிய வழி, அவனிடத்தில் செலுத்தும் பேரன்புதான் என்பதேயாகும். அதனால் சைவ சமயம் என்றால் அன்புச் சமயம் என்றே கூறலாம். "அன்பே சிவம்" என்பது சைவத்தின் முடிவு.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

என்று திருமூலரும்,

"யாவராயினும் அன்பரன்றி அறியொணா
மலர்ச் சோதியான்"

என்று மாணிக்க வாசகரும் கூறியிருத்தலை யாவரும் அறிவர். எனவே மக்கட் பிறப்பின் பயனாக நாம் செய்ய வேண்டுவது இறைவனிடத்தில் அன்பு செலுத்துவதேயாகும்.

இறைவனிடத்தில் நமக்கு அன்பு உண்டாவது எப்படி? அவன் உயிர்களுக்குச் செய்துவரும் உதவியை ஊன்றி எண்ணுவதாலேயே அவனிடத்தில் நமக்கு அன்பு உண்டாவதாகும். உயிர்களுக்கு எந்நிலையிலும் இறைவனது உதவி இன்றியமையாதது என்பதைச் சைவ சாத்திரங்களே சிறப்பாக வலியுறுத்தி விளக்குகின்றன. உயிர்களுக்கு உள்ள நிலை கட்டும் வீடும் என இரண்டு.

இவைகள் முறையே பந்தம் மோட்சம் என்று சொல்லப் படும். பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு இருக்கும் நிலை பந்தம்; பிறவி நீங்கி இறைவன் திருவடியை யடைந்த நிலை மோட்சம். இவ்விரண்டு நிலைகளிலும் உயிர்களுக்கு இறைவனது உதவி இன்றியமையாத தாகும்.

உடல் நிலை பெறுவதற்கும் இயங்குவதற்கும் உயிர் எவ்வாறு இன்றியமையாததோ, அவ்வாறே உயிர் நிலை பெறுவதற்கும் செயற்படுவதற்கும் இறைவன் அதனோடு எந்நிலையிலும் உயிர்க்குயிராய்க் கலந்திருத்தல் இன்றி யமையாதது என்பது சைவ சமயத்தின் அடிப்படை யான கொள்கை. கட்டு நிலையில் அதாவது உலகியலில் உயிர் ஐம்புலன்களை அறிந்தும் நுகர்ந்தும் வருவதெல் லாம் இறைவன் உடன் நின்று அறிவித்தும் நுகர்வித்தும் வருதலினாலேயே நிகழ்வன. அங்ஙனமே முத்தி நிலை யிலும் பேரின்பத்தை அவன் நுகர்விக்கவே உயிர் நுகர்வ தாகும். ஆகவே இவ்விரு நிலையிலும் அவனுடைய உதவி உயிருக்கு இன்றியமையாதிருத்தல் புலனாகும்.

இவ்வாறு இறைவன் உயிர்க்குயிராய் நிறைந்து நின்று செய்யும் உதவிகள் அளவற்றனவாயினும், அவை களை ஐந்தாக அடக்கிக் கூறுவர் பெரியோர். அவையே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களாகும். இவைகளைத் தூல ஐந் தொழில் என்றும், சூக்கும ஐந்தொழில் என்றும், அதி சூக்கும ஐந்தொழில் என்றும் வகுத்துக் காட்டுவர். உடம்பு இன்றி உயிர் ஒன்றும் செய்ய இயலாது. ஆத லின் உடம்பினை அதற்குச் சேர்த்து உலகத்தில் உலாவ விடுத்து நுகர்ச்சிப் பொருள்களையும் இறைவன் கூட்டி வைக்கின்றான். இதுவே படைத்தலாகிறது. இந்நிலையில் சிலகாலம் அவைகளை நிறுத்தி வைக்கிறான். அதுவே காத்தல். பின்பு உயிர்களை உடல் முதலியவற்றினின்றும் பிரித்துத் தனியே இருக்கச் செய்கின்றான். இதுவே அழித்தல் எனப்படுகிறது. இவ்வழித்தல் தொழில் பிறப்பு இறப்புக்களில் உழன்ற உயிர்களுக்கு இளைப்

பாறுதலைத் தரும். இவைகளைச் செய்யுமிடத்துத் தன்னை அவைகள் காணவொட்டாமல் மறைந்து நின்றே செய்வதனால் அது மறைப்பு எனத் தனியாகச் சொல்லப் படுகிறது. இவ்வாறு மறைத்தற்குக் காரணம் உயிர் களின் பக்குவமின்மையே. அவை பக்குவம் அடைந்த பின் உலகத்தை விடுத்துத் தன்னை உணர்ந்து தன்னையே அடையச் செய்கின்றான். இதுவே அருளல் எனச் சொல் லப்படுகின்றது. இவ்வைந்தொழில்களும் உயிர்களின் பொருட்டே செய்யப்படுவனவாகும். தினைத்துணை நன்றி செய்தவர்களையும் மறத்தலாகாது என்பது மறைமொழி; ஆனால் ஈடு சொல்ல முடியாத அளவற்ற பேருதவிகளைச் செய்து வருகிற இறைவனை மறத்தல் கூடுமோ! இவை தூலமாய்க் காணப்படும் பொருள்களிடத்து நிகழ்வதால் தூல ஐந்தொழிலாகும். எல்லா உலகத்தையும் ஒடுக்கிய நிலையில் அவற்றை மீள உண்டாக்குதற்குச் சில செயல் களை இறைவன் செய்வான். அவையே சூக்கும ஐந் தொழிலாகும். அவைகளை நாம் அறிதல் இயலாது. உயிர்கள் உடம்பொடு கூடி நிற்கும் காலத்து ஐம்புலன் களை அறியவும் நுகரவும் உடனிருந்து செய்துவரும் செயல்களே அதிசூக்கும ஐந்தொழில்களாகும். இத னாலேயே நினைப்பு மறப்புக்களாகிய சாக்கிரம் சொப் பனம் முதலிய ஐந்தவத்தைகள் உயிர்களுக்கு உண்டா கின்றன. எனவே விழிப்பிலும் கனவிலும் உறக்கத்திலும் கூட அவனது உதவி நமக்கு இருக்கிறது. இதனால் இறைவன் எப்பொழுதும் உயிர்க்குயிராய் நின்று உதவி வருகிறான் என்பது தெளிவாக விளங்குகிறது.

இவ்வாறு இறைவன் உயிர்களுக்குச் செய்துவரும் உதவியை நினைவு கொள்வதற்கு ஏற்பட்ட திருவடிவமே நடராஜ வடிவமாகும். சைவ சமயத்தின் தனிச் சிறப் புக்கு இது ஒன்றே சான்றாகும். இத்தலம் நடராஜப் பெருமானுக்குச் சிறப்புடையதாய் விளங்குதல் இங்கு நினைவுகொள்ள வேண்டும். இப்பெருமானைச் சுந்தரர்,

"ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே"

என்று தில்லைக் கூத்தனை வணங்கும்போது போற்றினரென்றால் இதன் பெருமை நன்கு விளங்கும். நடராஜ வடிவம் அவனுடைய ஐந்தொழில்களை விளக்கிக்கொண்டிருக்கிறது. உடுக்கை ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், நெருப்பை ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன. இவை பந்தத்தில் இருக்கும் ஆன்மாக்களுக்குச் செய்யும் உதவியாம். இதனை ஊன நடனம் என்பர்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

இனி, முத்தி நிலையையடையும் உயிர்களுக்கு இறைவன் செய்யும் உதவியும் அந்தத் திருநடனத்தினலேயே அறிவிக்கப்படுகிறது. உடுக்கை ஏந்திய கை மாயையை விளக்குவதையும், நெருப்பை ஏந்திய கை வினையை அழிப்பதையும், ஊன்றிய திருவடி ஆணவத்தின் சக்தியை அடக்குவதையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களைப் பிறவிக் கடலிலிருந்து எடுப்பதையும், அதனையடுத்து நின்று வீசிய கை அவ்வுயிர்களைச் சிவானந்தத்தில் அழுத்துவதையும் குறிக்கின்றன. இது ஞான நடனம் எனப்படும். இதனை

"மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்."

என்ற உண்மை விளக்கச் செய்யுளால் அறியலாம். எனவே நடராஜ வடிவமே அவனது செயல்களைக் காட்டி

உயிர்களுக்கு உண்மையை விளக்குகிறது என்பது புலனாகிறது. அவ்வடிவத்தைக் கண்டு அவன் செய்துவரும் உதவியினை நினைந்து அன்பு செலுத்த வேண்டும். அப்பொழுது மனம் உருகி இன்பம் உண்டாம்.

"அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம்மாறு."

என்ற திருவாசகத்தால் இவ்வுண்மையினை உணரலாம். ஆகவே அன்பே அவனையடைதற்குரிய வழியாகிறது. இவ்வழியினால் அன்பும் சிவமும் ஒன்றாய் அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் நிலை சைவ சமயத்தினால் அடையும் பயனாகின்றது. இத்தகைய உண்மைகளை இளமைப் பருவத்திலேயே உணர்ந்து அன்பு நெறியில் நம் மக்கள் நிற்றல் வேண்டும்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்."

என்று காரைக்காலம்மையார் மிக இளமையிலிருந்தே இறைவன் திருவடியில் அன்புகொண்டு ஒழுகியதைத் தெரிவிக்கின்றார். ஆதலின் அந்நெறியே சென்று பயன் பெறுவோமாக.

வாழ்க சைவ சமயம்.

முருகன் அச்சகம், சென்னை-14

பிற செய்திகள்

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் 78, 79 ஆம் ஆண்டு நிறைவு விழா 25-12-64 ல் மலைக்கோயில் நூற்றுக் கால் மண்டபத்தில் நிகழ்ந்தது. திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. சி. அரசப்பனார், திரு. சி. நடேசனார் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

அரியலூர் மணிவாசக மன்றத்தின் சார்பில் 25-12-64 முதல் 3-1-65 முடிய தினந்தோறும் காலை 7 மணிமுதல் திருவெம்பாவை விரிவுரைகளையும் 26-12-64 முதல் 3-1-65 முடிய இரவு 8 மணி முதல் தினந்தோறும் கம்பராமாயண விரிவுரைகளையும் உயர்திரு. அ. நடேச முதலியார் அவர்கள் கிருஷ்ணஞ் செட்டியார் மடத்தில் ஆற்றினார்கள்.

திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் பதினேழாவது ஆண்டு நிறைவு விழா 1, 2, 3-1-65 ஆம் நாட்களில் ஆதிகும்பேசுவரர் திருக்கல்யாண மண்டபத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

சித்தாந்தத் துணையாசிரியர் வித்துவான் அம்பை இரா. சங்கரனார் அவர்களால் திருமயிலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் தேவஸ்தானத் திருக்கல்யாண மண்டபத்தில் 4-1-65 முதல் 13-1-65 முடிய திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன.

பம்பாய் ஜோதி மன்றத்தின் சார்பில் குன்றுதோறாடும் குமரப் பெருமானுக்கு ஒரு திருக்கோயில் கட்ட முனைந்துள்ளது தெரிந்து மகிழ்கிறோம். பம்பாய் போன்ற, மக்கள் நெருக்கமுள்ள நகர்களில் குமரப் பெருமான் மலைமீதிருந்து மக்களுக்குத் திருக்கடைக் கண்ணோக்கம் செய்தருளுவானாகின் மக்களுய்வர் என்பது ஒருதலை. ஆகவே ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரும் ஒல்லும் வகையான் அம்மன்றச் செயலாளருக்கு ஊக்கப்படுத்தும் வகையில் எல்லாவிதங்களினும் உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

(துணையாசிரியர்)

சுசீந்திரத்தில் திருவாதிரைத் திருவிழா தேவாரக் கோஷ்டி 18-12-64 முதல் 20-12-64 வரை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளைப்படிச் சிறப்புற நிகழ்ந்தது.

மேலும் "தில்லையில் பல்லாண்டு விளக்குநிதி" மூலம் 19-12-64ல் சிதம்பரத்தில் தேர்த்திருவிழா அன்று திருப்பல்லாண்டு ஓதுதலும் சிறப்புற நிகழ்ந்தது.

புரசைத் திருநெறிக் கழகத்தின் வாயிலாய் மார்கழித் திங்கள் சொற்பொழிவுகளை தருமை ஆதீன ஓதுவார் சங்கீத பூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் 15-12-64 22-12-64 ஆகிய நாட்களில் வாரந்தோறும் முறையே நிகழ்த்தினர்கள்.

ஷை கழக 46-ஆம் திங்கள் வழிபாடு திருப்பெருந்துறை, உத்தரகோச மங்கை திருக்கோயில்களில் 18, 19, 20-12-64 நாட்களில் சிறப்புற நிகழ்ந்தது.

திருவெண்பாக்கம்

அன்பர்கள் பலரும் இக்கோயிலின் கும்பாபிஷேகத்தைச் சீக்கிரத்தில் சென்னை அரசாங்கம் ஏற்படுத்துமென எதிர்பார்க்கின்றனர்.

அனுதாபம்

டிசம்பர் 23, 1964-ல் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பாலும், புயலாலும் தனுஷ்கோடியிலும் இலங்கையில் மன்னர் முதலிய இடங்களிலும் பலர் மாண்டனர். பலர் வீடு வாசல் இழந்து துன்புறுகின்றனர். அவர்களுக்கு சமாஜம் அனுதாபம் உரித்தாகும். இராமேச்வரம் திருக்கோயில் ஒரு தீங்குமின்றித் தப்பியதற்கு இறைவன் திருவருளை நினைந்து போற்றுகிறோம்.

மாண்ட பல மக்களின் ஆன்மசாந்திக்காக அடுத்த ஜனவரி 23 ஆம் தேதி திருமுறையில் உள்ள ராமேச்சுவரத் திருப்பதிகங்களை நம் கோயில்களில் ஓதுவிக்குமாறு சைவப் பெரு மக்களை வேண்டுகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai B.A., L.T., for the Saiva Siddantha MahaSamajam 12, East Mada St., Mylapore, Madras-4.